## நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்! ...கிருஷ்ணதாசன்

அன்புள்ள தமிழ் நெஞ்சங்களே! சென்ற வாரப் பதிவில் வந்த வேலையை உணர்வதற்கு, உணர்ந்ததைப் பின்பற்றுவதற்கு இயற்கையின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வது நல்லது என்று எழுதியிருந்தோம். இன்றைய பதிவில் 'நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்' என்ற தலைப்பில் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

அன்பு நெஞ்சங்களே! தலையங்கம் கேட்டவுடன் புகைப்படக்கருவியால் அல்லது துணைக்கோளால் நம் நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன என்றுதானே நினைக்கிறீர்கள். அதனால் எல்லா இடத்திலும் பதிவு செய்ய முடியாது. இது வேறு விதமான பதிவு. கவனமாக உள்வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கூட இதைச் சோதித்து அறிந்து கொள்ளலாம்.

இயற்கை செயல்களை, நிகழ்வுகளைத் தன்னகத்தே பதிவு செய்கின்றது. தகுந்த காலத்தில் தகுந்தோர் மூலமாக விளைவுகளைக் கொடுக்கின்றது. நல்லோர் மூலமாக நல்ல விளைவுகளையும், கெட்டோர் மூலமாகக் கெட்ட விளைவுகளையும் அளிக்கின்றது. இயற்கைப் பதிவுகளைப் பற்றி எனக்குத் தெரிந்த நிகழ்வுகளில் சிலவற்றை பகிர்ந்து கொள்கிறேன்.

சில வருடங்களுக்கு முன் தொடர்ந்து பல நாட்கள் உணவு விடுதிகளில் சாப்பிட்டேன். மதியம் தொடர்ந்து ஒரு உணவு விடுதிக்குச் சென்றேன். தினமும் ஒரு குறிப்பிட்ட இடத்திலமர்ந்து உணவருந்தினேன். சில நாட்களுக்குப் பின் விடுதியில் நான் நுழைந்ததுமே உணவு பரிமாறுபவர் நான் வழக்கமாக அமரும் இடத்தில் வாழை இலையை வைத்தார். இது பல நாட்களுக்குத் தொடர்ந்தது. ஒரு நாள் நான் வழக்கமாக அமரும் இடத்தில் மற்றொருவர் உட்கார்ந்திருந்தார். நானோ வேறொரு இடத்திலமர்ந்து உணவருந்தினேன். மறுநாள் முதல், என் தலையைக் கண்டதும் இலை வைப்பதை நிறுத்திவிட்டு, நான் அமர்ந்த பின்தான் இலை வைத்தார்.

இரவு தொடர்ந்து மற்றொரு உணவு விடுதியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். தினமும் இரண்டு பரோட்டா சாப்பிடுவது வழக்கம். சில நாட்களுக்குப் பின் நான் உணவு விடுதியில் நுழைந்ததுமே, உணவு பரிமாறுபவர் சமைப்பவரிடம் 'இரண்டு பரோட்டா போடுங்கள்' என்றார். இந்நிலை பல நாட்களுக்குத் தொடர்ந்தது. ஒரு நாள் சென்றபோது பரோட்டா காலியாகிவிட்டது. எனக்கோ கடுமையான பசி. தோசை கொண்டு வரச் செய்து சாப்பிட்டேன். மறுநாளிலிருந்து நான் நுழைந்தவுடன், 'பரோட்டா போடுங்கள்' என்று சொல்வதை நிறுத்திவிட்டார்.

தினமும் இரண்டே முக்கால் மணி அளவில், மாடிக்குச் சென்று அங்கு வரும் காக்கை, புறா, அணில் போன்றவற்றிற்கு நான் உணவிடுவது வழக்கம். இப்படிப் பல நாட்கள் கடந்தன. சரியாக இரண்டே முக்கால் மணிக்கு அவை எனக்காகக் காத்திருக்கும். ஒரு நாள் நான் வெளியூர் சென்றமையால் வீடு திரும்பத் தாமதமாகியது. நான்கு மணிக்கு மேல்தான் மாடிக்குச் சென்று உணவிட்டேன். எந்த உயிரினமும் அங்கில்லை. மறுநாள் இரண்டே முக்கால் மணிக்குச் சென்றேன். அவைகள் வரவில்லை. எனக்கோ அதிர்ச்சி. பின்னர் அவை தாம் விரும்பிய நேரத்திற்கு வந்து உணவருந்திச் சென்றன.

ஒவ்வொரு சனிக்கிழமையும், இறை வழிபாட்டிற்காக மூன்று முழம் பூ வாங்குவது எனது வழக்கம். இந்நிலை தொடர்ந்தது. பின்னர் என் தலையைப் பார்த்தவுடன் பூக்காரி மூன்று முழம் அளந்து வைத்தார். ஒரு வாரம் 'நான்கு முழம் பூ மட்டும் மீதமிருக்கிறது. ஐயா, எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார். 'எனக்கு மூன்று முழம் போதும்' என்றேன். 'நீங்கள் காசு அதிகமாகக் கொடுக்க வேண்டாம், எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார். நானோ, 'மூன்று முழம் மட்டும் போதும்' என்று வாங்கிக் கொண்டேன். அதன் பிறகு என் தலையைக் கண்டதும் மூன்று முழம் மட்டுமே கொடுத்தார். இது பல வருடங்களுக்குத் தொடர்ந்தது.

இன்னொரு நிகழ்வு விரும்பினால் நீங்களே சோதித்து அறிந்துக் கொள்ளலாம். நீங்கள் தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு சூரியனை வழிபடுங்கள். தொல்லைகள் வரும். மேகம் வந்து சூரியனை மறைக்கும் அல்லது மழை வரலாம் அல்லது வேரு யாராவது உங்களை தொலைபேசியில் அழைக்கலாம் அல்லது உங்கள் குழந்தைகள் உங்களுக்குத் தொல்லை கொடுக்கலாம். இப்படி பல பிரச்சனைகளையும் மீறி தினமும் நீங்கள் குறித்த நேரத்தில் பல நாட்கள் தொடர்ந்து வழிபட்டுக் கொண்டிருந்தால் பிறகு நீங்கள் அந்த நேரத்திற்குச் சென்றவுடன் மேகமாயிருந்தால் கூட மேகம் விலகி சூரியனைக் காண்பீர்கள். மழை பெய்து கொண்டிருந்தால் கூட மழை நின்று சூரியன் உங்களுக்குக் காட்சி கொடுக்கும். முயற்சி செய்துதான் பாருங்களேன்.

மேற்கூறிய நிகழ்வுகளிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வதென்ன? நம்முடைய அன்றாடச் செயல்கள் மனிதர்கள், பறவை, விலங்குகள் மனதில், இயற்கையில் பதிவாகின்றன. அதைப் பொருத்தே விளைவுகள் நிகழ்கின்றன.

சில வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் இறந்தவர் ஒருவரின் குரலைப் பதிவு செய்துவிட்டதாக செய்திகள் படித்தேன். அங்கு இப்பொழுதுதான் பதிவு செய்தார்கள். ஆனால் தமிழகத்திலோ பல நூறு வருடங்களுக்கு முன்பே பதிவு செய்தோம். அது எப்படி என்று கேட்கிறீர்களா? அதைத் தெரிந்து கொள்வதற்காக சற்று பின்னோக்கிப் பயணிப்போம்.

நாதமுனிகள் தீவிர வைணவர். விஷ்ணு பக்தர். பல வைணவத் தலங்களுக்கும் கால் நடையாகச் சென்று தரிசித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் நாலாயிர திவ்விய பிரபந்தங்களைத் தொகுக்குமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டது. அது எப்படி முடியும். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு தலங்களில் பலர் பாடிச் சென்றுவிட்டனரே என்று நினைத்து திகைத்தார். 'வழிகாட்டப்படுவாய்' என்று பதில் வந்தது. சீக்கிரமே வானில் ஒரு ஒளி தோன்றியது. அதை நோக்கி நடந்தார். ஒளியும் நகரத் தொடங்கியது. பல நாட்கள் இந்நிலை தொடர்ந்தது. அவர் தூத்துக்குடி மாவட்டத்தின் தாமிரபரணி நதிக் கரையிலிருக்கும் ஆழ்வார்திருநகரியை அடைந்தார். ஒளியும் மறைந்தது.

ஆழ்வார்திருநகரியில் புகழ்பெற்ற வைணவத் தலமொன்று உள்ளது. அங்கே சென்றார். ஆதிநாதர் என்ற பெயர் கொண்ட பெருமாள் கோவிலை வலம் வந்தார். பெருமாளைக் கண்குளிரத் தரிசித்தார். நம்மாழ்வார் வாழ்ந்த, தவமிருந்த புளியமரப் பொந்தை அடைந்தார். நம்மாழ்வாரைத் துதித்தார். தியானித்தார்.

வெகு சீக்கிரம் நம்மாழ்வார் அவர் முன் தோன்றினார். அதெப்படி பல காலத்திற்கு முன்னர் வாழ்ந்து மறைந்தவர் எப்படித் தோன்ற முடியும் என்று கேட்கிறீர்களா? கண்டிப்பாக முடியும் அதற்கான

விளக்கத்தை பின்னர் ஒரு பதிவில் விளக்கமாக எழுதுகிறோம். இப்போது நாம் ஆழ்வார்திருநகரியில் என்ன நடந்தது என்று பார்ப்போம்.

தன் முன் தோன்றிய நம்மாழ்வாரை வணங்கினார். போற்றித் துதித்தார் நாதமுனிகள். இறைவனின் விருப்பத்தைக் கூறினார். நம்மாழ்வார் சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டே வந்தார். அவர் காலத்துக்கு பல வருடங்கள் முன் வாழ்ந்த பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் தொடங்கி அவரது பாடல்கள் மற்றும் அவரது காலத்திற்கு பின் வாழ்ந்த ஆண்டாள், மதுரகவி ஆழ்வார் உட்பட பன்னிரண்டு ஆழ்வார்கள் பல்வேறு பெருமாள் தலங்களில் பாடிய பாடல்களும் நம்மாழ்வார் சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டே வந்தார் நாதமுனிகள். அப்பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்விய பிரபந்தம் என்றும், திராவிட வேதம் என்றும் போற்றப்படுகிறது.

இதெப்படி சாத்தியம். இயற்கை நாம் பேசுவது, பாடுவது, செயல்படுவது அனைத்தையும் தன்னகத்தே பதிவு செய்கிறது. இதைத்தான் 'கடவுள் எல்லாவற்றையும் பார்த்து கொண்டிருக்கிறார்' என்று கூறுகிறோம். பதிவு செய்வது மட்டுமல்ல உடனே அனைத்து இடங்களுக்கும் பரவச் செய்கிறது. மேலும் சில உதாரணங்களைக் காண்போம்.

மிகவும் பழைய காலத்தே மன்னனுக்கோ, மக்களுக்கோ கடுமையான நோய்கள் என்றால் சித்தர்களை நாடுவது வழக்கம். பல நோய்களுக்கு மருத்துவம் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரியாது என்றால் சில சித்தர்கள் ஆழ்ந்து தியானிப்பர். அவர்களுக்கு அதற்குரிய மருந்துச் செடியும், மருந்து செடி இருக்குமிடமும் தெரியவரும். இதெப்படியென்றால் அந்தச் செடி இருக்குமிடம், அதன் அமைப்பு போன்றவை இயற்கையில் பதிவாகி எல்லா இடத்துக்கும் கடத்தப் படுகின்றன. சித்தர்கள் தியானத்தில் அதை உணர முடிந்தது.

சோதிடக்கலை இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உருவாயிற்று. எந்த வித அறிவியல் வளர்ச்சியும் பெரிதாக இல்லாத காலத்தில் கூட நவகிரகங்களின் இருப்பிடங்கள், அவற்றின் நகர்வால் ஏற்படும் விளைவுகள் போன்றவற்றை தியானத்திலேயே உணர்ந்தனர். கண்ணுக்குத் தெரியாத பலகிரகங்களைப் பற்றியும் செய்திகளைக் கூறினர். இயற்கைப் பதிவுகளை கொண்டுதான் இதையும் உணர்ந்தனர்.

சென்ற நூற்றாண்டில் (1946) இஸ்ரேலில் பிறந்தவர் யூரி கெல்லர். இங்கிலாந்தில் வாழ்ந்து வந்தார். அவரால் பல மைல்களுக்கு அப்பால் இருந்து ஒருவர் வாசிக்கும் புத்தகத்தைப் பற்றியும், அதன் விவரங்களை பற்றியும் கூற முடிந்தது. அதைப்போல் மறைத்து வைத்த ஓவியத்தைப் பற்றியும் சரியாகக் கூறும் ஆற்றல் பெற்றிருந்தார். இதற்குக் காரணம் இயற்கையின் பதிவு செய்தலும், அதன் கடத்தும் தன்மையும் தான். யூரி கெல்லரின் வரலாற்றைப் புரட்டினால் இது உங்களுக்குத் தெரியவரும்.

சென்ற நூற்றாண்டில் ஒரு நாள் சுவாமி யுக்தேஸ்வர் கிரியும் அவர் சீடர்களும் அவரது ஆசிரமத்தில் இருந்து புறப்பட்டு கடற்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று சுவாமிகள் 'திறந்து கிடக்கும் பின் வாசல் வழியாக திருடன் நுழைகிறான். அவன் அங்கு சென்று ஒரு முட்டைகோஸ் எடுக்கப் போகிறான்' என்று கூறினார். அவர்கள் கடற்கரைக்குச் சென்று திரும்பி வந்து பார்த்த போது வாசல் கதவு திறந்து கிடந்தது. முட்டை கோஸ் மட்டும் காணாமல் போனது. இந்நிகழ்வு சுவாமி யோகானந்தா எழுதிய ஒரு யோகியின் சுயசரிதம் என்ற புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆம்

இயற்கை எல்லாவற்றையுமே பதிவு செய்து எல்லா திசைகளிலும் கடத்திக் கொண்டிருக்கிறது. தகுந்தவர்கள் மூலமாக இந்நிகழ்ச்சிகளை உணர, பார்க்க, வெளிக்கொணர முடியும்.

ஆம், கடவுளுக்குக் (பேரண்ட சக்தி) காணுமிடமெல்லாம் கண்கள். எல்லாவற்றையும் பதிவு செய்கிறார். தகுந்த காலம் வரும் போது விளைவுகளைக் கொடுக்கிறார். இதிலிருந்து எந்த தனிமனிதனும் அல்லது நாடும் தப்பிவிட முடியாது. அதை உணர்ந்து தர்மத்தின் பாதையில் பயணிப்பது தனிமனிதனுக்கும் நல்லது. நாட்டிற்கும் நல்லது. ஒரு தனி மனிதன் தவறு செய்தால் அவனது குடும்பம் பாதிக்கப்படுகிறது. நாட்டின் தலைவன் தவறு செய்தால் நாடே பாதிக்கப்படுகிறது. ஆம், நாம் கடவுளால் கண்காணிக்கப்படுகிறோம். எல்லாவற்றிலும் நிறைந்திருக்கிற இப்பேரண்ட சக்தியைத்தான் கிருத்தவர்கள் கர்த்தர் என்றும், முஸ்லீம்கள் அல்லாஹ் என்றும், இந்துக்கள் ஆதிபராசக்தி என்றும் போற்றுகின்றனர். இதை உணராமல் மதத்தின் பெயரால் மக்களுள் சிலர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். நன்றி. வணக்கம். அடுத்த பதிவில் சந்திப்போம்.